முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 05 திகதி முதல்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 12 திகதி வரை

(19.03.2023 ஞாயிறு முதல் 26.03.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தானதரும வழிகள் காட்டும்
   தருமனே ஆறுமுக அரங்கனே
   ஞானயுகம் படைக்க வந்த
   ஞானியே ஞான தேசிகனே
2. தேசிகனே அவதார பெருமை கூறி
   தெரிவிப்பேன் அரங்கன் நீகேட்க
   ஆசிபட இந்தியா தமிழகம் தன்னில்
   அறிவிப்பேன் சுபகிருது சேல்திங்களில்
3. திங்களிலே பஞ்சதிகதிமேல் வியதிகதிவரை
   தேசமதின் நிகழ்வாக வருங்கால
   இங்கனமே பலன்குறித்த வாரஆசி
   இயம்பிடுவேன் அகத்திய மகரிஷி யானும்
4. யானும் உரைக்க இனிதே
   உயர்வான ஞான வழிகளை
   தானாக உடன்வந்து அரங்கன்
   தவ வழிமுறைகளை ஏற்று
5. ஏற்றுமே ஆளுமை அதிகாரிகள்
   என அனைவரும் சரணாகதி
   பற்று வைத்து வந்து நன்கு
   பணிந்து தீட்சை ஆசிபெற
6. ஆசிபெற அவரவர் வினைகள்
   ஆசாபாச பேராசை எண்ணங்கள்
   ஆசிபெற அகன்றோடி இனிதே
   அனைவருக்கும் ஞானபலம் காண்கும்
7. காண்கவே இந்தவித நல்நிலை
   கந்தப் பெருமான் அனுகூலமாக
   மேன்மைநிலை ஆளுமை தன்னில்
   முதன்மையாக மக்களை காக்கும் வண்ணம்
8. வண்ணமுடன் ஞான சக்திகளாக
   வளர்ச்சிதரும் தேசங்களாக மாறி
   மண்ணுலகம் வியக்க இனிதே
   மாற்றம் இந்தியா தமிழகம் அடையும்

9. அடையவே இயற்கையை காக்கும்
ஆளுமையை புரிந்து நடத்திட
சோடையின்றி ஆளுமைக்கு காப்பு
சோதனை இல்லா தேற்றமாகி
10. ஆகியே தேட்டு தனவளமென
அந்நிய முதலீடுகளும் பெருகி
அகிலமதில் இந்தியா தமிழகம்
அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி
11. வளர்ச்சி கண்டு தேவைக்கு மேலான
வருவாய் பெருக்கம் மாற்றமென
தளர்விலா ஏற்றம் மிகுதி கண்டு
தமிழகம் இந்தியா தனித்துவம் அடையும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் : சுபகிருது வருடம் பங்குனி மாதம் 05ம் நாள் 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 12ம் நாள் 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலக மக்கள் மேன்மையான வாழ்வினை பெற தானதரும வழிகளை காட்டி எல்லையில்லா தர்மங்களை செய்தும் தர்மத்தின் தலைவனாக விளங்குகின்ற ஆறுமுக அரங்க மகானே இவ்வுலகினில் கலியுகத்தினை மாற்றி ஞானயுகத்தை ஞானிகள் துணையுடன் முருகப்பெருமான் தலைமையிலே அமைத்திடவே வந்துதித்த மகாஞானியே ஆறுமுக அரங்க மகானே! உமது அவதாரத்தின் பெருமைகளை உலகம் அறிய கூறியே இந்தியா தமிழகத்தின் எதிர்காலத்தை தாம் கேட்க அகத்திய மகரிஷி யானும் சுபகிருது வருடம் பங்குனி மாதம் 05ம் நாள் 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 12ம் நாள் 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாடு வளம் பெற ஆளுமை, அதிகாரிகள் என அனைவரும் அரங்க மகான் கூறும் தரும நெறிகளை சன்மார்க்க கொள்கைகளை, வழிபாடு முறைகளை ஏற்று அரங்க மகானிடத்து தீட்சை ஆசி பெற்றிட்டால் தீட்சை பெறுகின்றவர்களது முன்ஜென்ம பாவங்களான கர்மவினைகள் நீங்கிடும் ஆசாபாசங்கள் குறையும் பேராசையான எண்ணங்கள் அவர்களை விட்டுவிலகும் அவரவர் உள்ளும் ஞானம் பெருகி ஞானபலம் பெறுவார்கள். இப்படிப்பட்ட நல்ல நிலையை முருகப்பெருமான் அருள் செய்வதாலே உயர் பதவியில் உள்ளவர்கள் தங்களது முதல் கடமை மக்களை காப்பது என தெளிந்து, தூய்மையானவர்களாக மாறி ஞானசக்திகளாக ஆகியே இந்த உலகமே வியக்குமாறு இந்தியாவும், தமிழகமும் மாற்றம் அடையுமப்பா. ஆட்சியர்கள் இயற்கை வளங்களை காக்கும் விதமாக ஆட்சி புரிந்து வர தடையின்றி அவர்களது ஆட்சி பலமுடனும், பாதுகாப்புடனும் இனிதே நடக்கும். சோதனைகள் இல்லாத அமைதியான ஆட்சியாக அமையும். உலக நாடுகளால் அதிகமான முதலீடுகளை பெற்று உலகிலேயே இந்தியா தமிழகம் எல்லா துறைகளிலும் வளர்ச்சி அடைந்து தனது தேவைக்கும் மேலாக வருமானம் பெருகி வளர்ச்சி அடைந்த நாடாக மாறிடும். உலகிலேயே அமைதியும், பாதுகாப்பும், பலமும் மிக்க தனித்துவமான நாடாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி. –சுபம்–